நியூ கேம்பிறிஜ்
திருநெல்வேலிச் சந்தி

புதியவகுப்புகள்
ஆரம்பம் 1-1-81
3-ம் வகுப்பு முதல்
10-ம் வகுப்பு வரை
எல்லாப் பாடங்களும்
SHORT HAND & TYPING
I. B. K., I A. A.
மேலதிக விபரங்கட்கு:
V. M. Packkiyanathan


UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED 1980-12-29
PERIODICALS DIVISION
LIBRARY


பக்கங்கள் 8

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 22 மார்கழி 12 ஸைபர் 20 இதழ் 320
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 29-12-80


# விடுதலைப்பணியில் ஈடுபட இருசாராரும் முயல்வர்

## தமிழர் கூட்டணி சமரச சந்திப்பின் அறிக்கை

### "தமிழ்ச் சமுதாயம் சிதைந்துவிடுவதை தவிர்க்கவே சமரச முயற்சி"

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைமைப்பீடத்துக்கும் தீவிரவாதிகள் குழுவெனக் கருதப்படுபவர்களுக்குமிடையே சமரசத்தை ஏற்படுத்து முகமாக நேற்று யாழ்ப்பாணத்தில் சட்டத்தரணி இ. பாலசுப்பிரமணியத்தின் இல்லத்தில் நடைபெற்ற சந்திப்பு காலை பத்தரை மணிமுதல் பிற்பகல் ஒன்றரை மணிவரை நடைபெற்றது. பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகி சுமார் ஒரு மணிநேரம்வரை காரசாரமாக பரஸ்பரம் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வாதிக்கப்பட்ட போதிலும் இறுதியில் சில தீர்மானங்களை நிறைவேற்றிச் சுமுகமாகவே முடிந்தது.

"சமூகம் அழிந்துவிடாமலிருப்பதற்காகவே நாம் சமரசமுயற்சியில் ஈடுபட்டிருக்கின்றோம். இந்த முயற்சி வெற்றிபெற்றேயாகவேண்டும். இல்லையேல் ஒற்றுமைப்பட்ட தமிழ்ச்சமுதாயம் சிதைந்துவிடும்" என்று முன்னாள் மூதவை உறுப்பினர் திரு. சு. நடராசா 'ஈழநாடு' பிரதிநிதியிடம் நேற்றுத் தெரிவித்தார்.

சட்டத்தரணி இ பாலசுப்பிரமணியத்தின் இல்லத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பின் வெளியிடப்பட்ட அறிக்கையின் விபரம் வருமாறு:

சமீபகாலத்தில் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை இயக்கத்தில் தலைதூக்கியிருக்கும் கருத்து வேற்றுமைகளை ஆராய்ந்து தீர்க்கும்பொருட்டு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் அவர்களையும் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களையும், முன்னாள் மூதவை உறுப்பினர் திரு சு நடராசா அவர்களின் தலைமையில் எழுவர் கொண்ட குழு சந்தித்து உரையாடியது. திரு. இ. பாலசுப்பிரமணியம் சட்டத்தரணி அவர்களுடைய இல்லத்தில் நடைபெற்ற இச்சந்திப்பின்போது திரு. நடராசாவோடு டாக்டர் எஸ். ஏ தர்மலிங்கம், திரு. மு வே. நவரத்தினம், திரு. இ பாலசுப்பிரமணியம், திரு. க கனகலிங்கம், டாக்டர் ச. மாணிக்கராசா, திரு செ. ரொம்பைப்பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர். கருத்து வேற்றுமைக்கான விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டு பின்கண்ட விடயங்களில் உடன்பாடு காணப்பட்டது.

1. இயக்கத்தில் பிளவுஏற்படுவதற்கு விடக்கூடாது.

2. இயக்கம் விஸ்தரிக்கப்பட்டு மக்கள் மத்தியில் விடுதலை இயக்கம் என்ற உணர்வு தோன்றத் வகையில் செயற்படவேண்டும்.

3. தமிழர் விடுதலைக்கூட்டணியின் அமைப்பை விஸ்தரிக்க 1981-ம் ஆண்டு பெப்ரவரி 2-ம் திகதி முதல் எடுக்கப்பட்ட திட்டமிடப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் விளக்கப்பட்டன.

4. இயக்கத்தைப் பலப்படுத்துவதற்காக மாற்று யோசனைகள் சமர்ப்பிக்கப்படும்.

5. அதனைக் கூட்டணி பரிசீலித்து இருசாராரும் மீண்டும் கூடி ஆராய்ந்து ஓர் சிறந்த

(8-ம் பக்கம் பார்க்க)

## 'ஈழநாடு' பஞ்சாங்கம் 1981

1981-ம் ஆண்டுக்குரிய 'ஈழநாடு' பஞ்சாங்கம் வழமைபோல் சகல அம்சங்களையும் கொண்டு 1—1—1981 அன்று வெளிவரும். வாசகர்கள் தங்கள் பிரதிகளுக்கு முன்கூட்டியே 'ஈழநாடு' விற்பனையாளர்களுடன் பதிவு செய்து கொள்ளவும்.

—நிர்வாகி.

## ஜனாதிபதி-யமானி சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை வந்துள்ள சவூதி அரபிய எண்ணெய் அமைச்சர் ஜனாப் ஷேக் யமானி நேற்று ஜனாதிபதியைச் சந்தித்து நிதியுதவிகள் பற்றி விரிவாக பேச்சுவார்த்தை நடத்தினார்.

## கண்ணமணி சுட்டுக்கொலை

சென்னை டிச 28. நக்ஸலைட் தலைவர்களில் ஒருவரான கண்ணமணி பொலிஸாரினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

தீவிரவாதியான கண்ணமணி வட ஆற்காடு மாவட்டத்தில் மலைக்குன்றுக்குள் பதுங்கியிருந்தபோது பொலிஸாருக்கும் இவருக்குமிடையே மோதல் இடம்பெற்றதென்றும் கண்ணமணி சுட்டதில் ஆறு பொலிஸார் காயமடைந்தனர் என்றும் பொலிஸார் திருப்பிச் சுட்டதில் அவர் ஸ்தலத்திலேயே பலியானார் என்றும் தெரிவிக்கப்பட்டது. இவர்பல வருடங்களாக தலைமறைவாக இருந்தவர். பல கொலைக்குற்றச்சாட்டுக்கள் இவர்மீது சுமத்தப்பட்டிருந்தன.

யாழ். மாநகர ப. நோ. கூ. ச.

## மீண்டும் ஆலால் தலைவராக தெரிவு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவராக மீண்டும் சட்டத்தரணி எம். ஆலாலசுந்தரம் தெரிவு செய்யப்பட்டார்.

சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம், யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கூட்டுறவு அதிகாரி திரு ஈ. சற்குணலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

கடந்த விசேட கூட்டத்தில் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டதுபோல் புதிய நெறியாளர் குழு தெரிவு நடைபெற்றது.

இத்தேர்தலில் 13 பேர்போட்டியிட்டு 7 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

திருவாளர்கள் எம். ஆலாலசுந்தரம், பி ஜோசப், ரி பி. அருளானந்தம், ஆர். அருளானந்தம், செ. அருளம்பலம், ஓ. எஸ். எம் ஏ கபூர், எஸ். பூபாலசிங்கம் ஆகியோர் புதிய நெறியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

பின்னர் நடந்த நெறியாளர் குழுக் கூட்டத்தில் சட்டத்தரணி எம் ஆலாலசுந்தரம் தலைவராகவும், திரு ரி. பி. அருளானந்தம் உப தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். (ஈ)

வீதி மின்சாரம், சுகாதாரம்:

## நாற்பது லட்சம் ரூபா செலவிடப்பட்டது!

### யாழ். முதல்வர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் வீதி அபிவிருத்தி 22 லட்சம் ரூபாவிற்கு மேல் செலவிடப்பட்டுள்ளது. மின்சாரத்திற்கு 7 லட்சம் ரூபாவிற்கு மேலும் செலவிடப்பட்டுள்ளது. வரியிறுப்பாளர்களுக்காக சுமார் 40 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபையின் வரவு செலவுத்திட்ட விவாதத்தின்போது கூட்டத்திற்கு தலைமைவகித்த முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. இராஜா விஸ்வநாதன் மேலும் கூறியதாவது: 7 முக்

(8-ம் பக்கம் பார்க்க)

மதுரை தமிழாராய்ச்சி மாநாடு:

## சிங்கள அறிஞர்களும் கட்டுரை வாசிப்பர்

(யாழ்ப்பாணம்)

மதுரையில் நடைபெறவிருக்கும் தமிழாராய்ச்சி மகாநாட்டில் வாசிப்பதற்காக இலங்கையிலிருந்து ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்திருப்பவர்களில் சிங்கள அறிஞர்களும் இருக்கிறார்கள். கலாநிதி ஆர். டி. குணரட்ண என்பவர் 'ஆனந்த குமாரசாமியும் பௌத்தமதமும்'' என்ற கட்டுரையைச் சமர்ப்பித்துள்ளார். திரு.டி.டி.நாணயக்கார ''பிறமொழி அறிஞர்களை ஈர்க்கும் தமிழ் மொழியின் சில அம்சங்கள்'' என்ற கட்டுரையைச் சமர்ப்பித்துள்ளார். [illegible] 1619- [illegible] யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயர் கடைப்பிடித்த இறைவரிக் கொள்கைகள் என்ற கட்டுரையையும், கலாநிதி டபிள்யு எஸ். கருணாதிலக்காவும், திரு. எஸ். சுசீந்திரராஜாவும் இணைந்து யாழ்ப்பாணத் தமிழர்-இலங்கை தமிழ் முஸ்லிம்களின் மொழித் தொடர்புகள் பற்றிய ஆய்வுக்கட்டுரை ஒன்றையும் சமர்ப்பித்துள்ளனர்.

மகாநாட்டின் ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள 300 கட்டுரைகளில் 75 கட்டுரைகள் இலங்கையிலிருந்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளனவாம்.

இலங்கையில் இருந்து சபாநாயகர் ஜனாப் பாகீர் மார்க்கார், அமைச்சர்கள் திரு. எஸ். தொண்டமான், திரு. செ. ராஜதுரை, எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மற்றும் சுமார் 20 எம்பிக்கள் உட்பட 150 பிரதிநிதிகள் மதுரை மாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கிறார்கள்.

ஜனவரி 4ம் திகதி ஆரம்பமாகவிருக்கும் இம்மகாநாடு பத்துநாட்களுக்கு நடைபெறவிருக்கின்றது.

நான்கு ஆண்டுகளுக்கு ஒருதரம் நடைபெறும் இம்மகாநாடு முதன் முதல் மலேஷியாவில் வண. தனிநாயகம் அடிகளாரின் முயற்சியின் பேரில் நடைபெற்றது. அப்பொழுது

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

முட்டைகளுக்கென தெரிவு செய்யப்பட்ட உயர்ந்த இன ஒரு மாத பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. அழகராஜா, வேதக் கோயில், அல்வாய். (முத்துமாரியம்மன் கோயிலுக்கு அருகில்.) 7781

சேவல் கோழிகள் (இறைச்சிக்கு) புதுவருடப் பண்டிகையை முன்னிட்டு தொகையாகவும், சில்லறையாகவும் மிக மிக மலிவாக விற்கப்படும். சிறந்த வளர்ப்பதற்கு 2 மாதக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. சு. பாலேந்திரா, 586 கண்டி ரோட், நெடுங்குளம் சந்திக்கு அருகாமையில் அரியாலை யாழ்ப்பாணம். 7783

யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் சகல வசதியுடன் வீடு, வளவு விற்பனைக்கும், பெண்களுக்கு மட்டும் சாப்பாட்டுடனும் தனித்தும் அறைகள் வாடகைக்கும் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும் சி. கனகரெத்தினம், 465/1 கே. கே. எஸ் ரோட், யாழ்ப்பாணம். 7666

## தேவை

அச்சுக்கோப்பாளர், மெசின் மைண்டர் உடன் தேவை நேரில் வரவும் ஆர் எஸ். அச்சகம், யாழ்ப்பாணம், 7782

## வகுப்புகள்

German Language புதிய வகுப்புக்கள் 5-1-81-ல் ஆரம்பமாகின்றன. தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம் சபாநாயகம் "றாடிக்கொட்" 33, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 7785

## பயிற்சி

3 மாத பொது விவசாயப் பயிற்சி 17—25 வயதுடைய இருபாலருக்கும் 19-01-81 ஆரம்பமாகின்றது. ஊதியம் வழங்கப்படும். உடனடியாக விண்ணப்பிக்கவும். முடிவு திகதி 05-01-81 அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி-விவசாய நிறுவனம், மருதனமடம், சுன்னாகம். 7677

## கூ. ச. ஊழியர் நத்தார் விழா

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறச் சங்க ஊழியர்களின் கிறிஸ்மஸ் நத்தார் தினவிழா சிறப்பாக நடைபெற்றது. சில்லாலை பங்குத்தந்தை அருட் திரு. எச். ஜெயநேசன் அடிகளார், பண்டத்தரிப்பு ப.நோ. கூ. சங்கத் தலைவர் திரு. எஸ் இராசநாயகம் ஆகியோர் உட்படப் பலர் இவ்விழாவில் உரையாற்றினார்கள். கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (அ

# ஒதுக்கிய நிதி திருப்பியது!

(வவுணதீவு நிருபர்)

குருவளியினால் சேதமடைந்த ஈச்சந்தீவு—கன்னன்குடா ப. நோ. கூ. சங்கத்திற்கு நவீன வசதிகளுடன் மாடிக் கட்டிட நிர்மாணத்திற்கு பிராந்திய அபிவிருத்தி அமைச்சு 5 லட்ச ரூபாவை ஒதுக்கியிருந்தும் சங்க நிர்வாகம் உரிய காலத்தில் நிர்மாண வேலைகளை ஆரம்பிக்காமையால் நிதி ஒதுக்கீடு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. கடந்த நவம்பர் மாத முதல் வாரத்தில் நிதி ஒதுக்கப்பட்டிருந்தமையாலும் மழைக் காலமாகையாலும் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை என்று சங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

குறித்த சங்கம் அமைச்சரைக்கொண்டே அத்திவாரக் கல்லை நடுவதற்கு இருதடவைகள் ஏற்பாடுகளைச் செய்திருந்தது. ஆயினும் அமைச்சர் வருகைதாவில்லையாம் இது பற்றி விசாரித்தபோது திருப்தியான விளக்கமளிக்க முடியாமல் நிருவாகிகள் காணப்பட்டனர். நடப்பு ஆண்டு நிதி முடிவடைவதையிட்டே மேற்படி நிதி ஒதுக்கீடு திருப்பப்பட்டதென விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## தரமற்ற மா

[உடுப்பிட்டி]

நெல்லியடிப் பகுதியில் விற்கப்படும் மா துர்நாற்றம் வீசுவதுடன் உணவுப் பொருட்களைத் தயாரிக்க முடியாததாக இருப்பதாகவும் புகார் தெரிவிக்கப்படுகின்றது. (அ

## அரிசி விலை பற்றி அச்சம்

(வவுணதீவு)

மட்டக்களப்புப் பகுதியில் நிலவிவரும் காலநிலைச் சீர்கேடு எர்வரும் பெரும்போக அறுவடையின் போது அரிசியின் விலையை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகின்றது. தற்போது இங்கு பகலில் கடுமையான வெய்யிலும், இரவில் குளிரும், பேடுபனியும் நிலவுகின்றது. வரட்சியினால் அறக்கொட்டியான் உட்பட பல வித நோய்களினாலும் விவசாயம் பாதிக்கப்பட்டு வருகின்றது.

## பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

சுன்னாகம் மருதனமடத்தைச் சேர்ந்த செல்லத்துரை தர்மரட்ணத்தின் மரணசாதனமில்லாச் சொத்துக்களின் விடயத்தில்

காலஞ்சென்றவர்

வழ. இல. ரீ/76

1. டாக்டர் சின்னப்பு இராசரத்தினமும்
2. பெண் பொன்னம்மாவும் இருவரும் மருதனமடம், சுன்னாகம்.

மனுதாரர்கள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே பெயர் கொண்ட குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் கொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981-ம் ஆண்டு தை மாதம் 30-ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1980-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 21-ந் திகதி.

மன்றின் கட்டளைப்படி

மூ. நல்லலிங்கம்,
பதிவாளர்.

வரைதல்

செ. மகேசன்,
மனுதாரின சட்டத்தரணி
7749

## பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

சுன்னாகம் மருதனமடத்தைச் சேர்ந்த செல்லத்துரை சுப்பிரமணியத்தின் மரணசாதனமில்லாச் சொத்துக்களின் விடயத்தில்

காலஞ்சென்றவர்

வழ. இல. ரீ/77

1. டாக்டர் சின்னப்பு இராசரத்தினம்
2. பெண் பொன்னம்மாவும் இருவரும் மருதனமடம், சுன்னாகம்.

மனுதாரர்கள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணச் சொத்து வழக்கு மேலே பெயர் சொண்ட குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1981ம் ஆண்டு தை மாதம் 30-ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாது என்பதற்குக்காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1980-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 21-ந் திகதி

மன்றின் கட்டளைப்படி

மூ. நல்லலிங்கம்,
பதிவாளர்.

வரைதல்

செ. மகேசன்
மனுதாரர்களின் சட்டத்தரணி
7750

## புதுவருடத்தன்று

# 'யுப்பிற்றஸ்' வி.க. நடத்தும் உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் யுப்பிற்றஸ் விளையாட்டுக் கழகத்தின் ஒரே நாளில்முடியக்கூடிய நொக்கவுட் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றினை புதுவருட தினத்தன்று நடாத்த உள்ளனர்.

சென். அன்ரனிஸ் விளையாட்டுச்சழகத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படவிருக்கும் இச்சுற்றுப்போட்டிக்கு யாழ். மாவட்டக் கடற்றொழில் விஸ்தரிப்புஅதிகாரி திரு ஏ. பிலிப்ஸும் திருமதி பிலிப்ஸும் விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

இச்சுற்றுப் போட்டியில் வெற்றியீட்டுப்சோஷ்டிகளுக்கு சுழல் கேடயம் உட்பட பல பரிசில்கள் வழங்கப்படவிருக்கின்றன. (ச)

சி. அமிர்தலிங்கம்,
சட்டத்தரணி,
சோடபாய்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

தெல்லிப்பளை வீமன் காமத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற வீரசிங்கம் அற்புதநாதன் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

வீரசிங்கம் யோகநாதன், வீமன்காமம், தெல்லிப்பளை.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல 3470

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981-ம் ஆண்டு மாசி மாதம் 13-ந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

பொ. பாக்கியநாதன்
பதிவாளர்.

1980-ம் ஆண்டு மார்கழி மாதம் 19-ந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

7700

## சிநேகபூர்வமான உதைபந்தாட்ட போட்டி

(பலாலி)

தெல்லிப்பழை மகாஜனன்ஸ் விளையாட்டுக் கழகத்தற்கும், யாழ்ப்பாணம் சபகுன் விளையாட்டுச்சழகத்திற்குமிடையே மகாஜனக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப்போட்டியில் இரு சோஷ்டிகளும் தலா இருகோல்களைப் போட்டுக் கொண்டமையால் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

குருநகர் பாடும்மீன் வி. சழகத்துடனான மற்றுமொரு போட்டியில் மகாஜனன்ஸ் வி. கழகத்தை பாடும்மீன் வி. கழகம் 3—1 கோல்களால் வெற்றி பெற்றுள்ளது. இப்போட்டிகளுக்கு திரு. பி. இராஜகாந்தம் மத்தியஸ்தம் வகித்தார். எதிர்வரும் முதலாம் திகதி வல்வெட்டித்துறை புளூஸ். விளையாட்டு கழகத்துடன் மகாஜனன்ஸ் வி. சழகம் சிநேகபூர்வமான போட்டியொன்றை நடாத்துகிறது. இப்போட்டி மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (ஈ)

# நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

## மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழ. இல. ஈடு/2806

1. கதிரவேலு முத்தவர்
2. பெண் சீதேவியும் இருவரும் சுழிபுரம்

வழக்காளிகள்

எதிராக

பற்குணராசா கைம்பெண் வள்ளியம்மை
சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.

எதிராளி

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் ஈடு/2806-ம் இலக்க வழக்கில் எனக்கு கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணி 1981-ம் ஆண்டு ஜனவரி மாதம் 17-ந் திகதி 17-1-1981) சனிக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

மேற்குறித்த எதிராளி குறித்த வழக்காளிகளுக்கு ரூபா 910/-வும் மேலும் ரூபா 500/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12% வட்டி வீதம் வழக்கு வினைத்த திகதியாகிய 1978-ம் ஆண்டு மார்கழி மாதம் 21-ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1979- ஆண்டு ஐப்பசி மாதம் 19-ந் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5% வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 378/10 (இதில் நடைபெற்ற செலவு ரூபா 205/35 நடைபெறவேண்டிய செலவு ரூபா 106/65) ரூபா 66/10 மேலதிக சமயாசமயச்செலவு கொடுத்தல் வேண்டும்.

### குறித்த ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிவிஷன் வலிகாமம் மேற்குப்பகுதி சங்கானை கோவிற்பற்று சுழிபுரம் மிறை மங்களம் ஒல்லை பர. நிலை. இலக்கம் இரண்டும் கிணறும் பனைகளும் வான் பயிர் செய்பயிர்களும் இதில் தெற்கு பக்கமாக பர நிலை இல ஒன் ... (பர நிலை இல1) இக்க பர நிலை இல ஒன்றுக்கும் எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை சின்னத்தம்பியின் ஆதனம், வடக்கு சின்னமுத்தன் வேலுப்பிள்ளையினதும் ஆதயினதும் பெண் சின்னப்பிள்ளையினதும் ... பெண் ... மேற்கு ஒழுங்கை, தெற்கு வாமுத்து ... பெண் ... லெட்சுமியின் ஆதனமும், தெற்கு ஒழுங்கையிலிருந்து இக்காணிக்கு வரும் கையொழுங்கை முகப்பும் வடக்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் தண்ணீர் எடுப்பதற்கு வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் இதடங்கலும்.

பிரான்சிஸ் எக்ஸ் ஜோக்கிம்,
நீதிமன்ற விற்பனை சமிஷனரும்,
விலைமதிப்பாளரும்

"பதுவை";
பண்டத்தரிப்பு,
26-12-1980.

7772


# யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரைவுள்ளது)

## புதிய கடை கட்டிடங்களுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன

மேர்படி எமது புதிய கட்டிடத்தில் (காங்கேசன்துறை வீதி — சி எஸ் கே. மில் அருகாமை) உள்ள ஏழு கடைகள் கேள்வி மூலம் குத்தகைக்கு உண்டு. விண்ணப்பிக்க விரும்புவோர் ரூபா 100/- மீளப் பெறாத வைப்புப் பணமாகவும், ரூபா 1000/- மீளப் பெறக்கூடிய வைப்புப் பணமாகவும் செலுத்தி, அதற்குரிய கேள்வி விண்ணப்பப் படிவத்தையும், கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளையும் எமது தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் பதிவுத்தபால் மூலம், பொது முகாமையாளருக்கு விலாசமிட்டு, வலது பக்க மேல் மூலையில் "புதிய கடைக்கான கேள்வி" எனக் குறிப்பிட்டு, 30-01-'81க்குப் பிந்தாமல் அனுப்பப்படல்வேண்டும்.

பொது முகாமையாளர்

74/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
1980-12-27.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லண்டன் மறுமலர்ச்சிக்கழகம் கோருகிறது

# அனைத்துலகத் தமிழ்ப்பண்பாட்டு கழகம் நிறுவுக!

லண்டன், டிச. 27

அனைத்துலகத் தமிழ்ப் பண்பாட்டு ஆலோசனை நிறுவனம் ஒன்றினை உடனடியாக அமைக்க ஆவன செய்யும்படி லண்டனிலுள்ள அனைத்துலகத் தமிழ் மறுமலர்ச்சிக் கழகம் தமிழ்நாடு அரசைக் கேட்டிருக்கிறது.

மேற்படி கழகத்தின் இயக்குநர் திரு. சே. ஞானசூரியன், தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி. ராமச்சந்திரனுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

தமிழ்நாட்டில் நடைபெறவிருக்கும் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு சிறப்புற நடைபெற வேண்டுமென வாழ்த்தியுள்ள திரு. ஞானசூரியன், கடிதத்தின் பிரதிகளை ஏனைய தமிழ்த் தலைவர்கள் அறிஞர்கள் முதலானோருக்கு அனுப்பியுள்ளார்.

அனைத்துலகத் தமிழ்ப் பண்பாட்டு நிறுவனம் ஒன்றை நிறுவி, தமிழ்நாடு அரசே நிர்வகிக்கவேண்டும். உலகத் தமிழ்ச் சமூகத்தவரிடையே பண்பாட்டுப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. தமிழரின் மொழி, புறக்கணிப்புக்கு உள்ளாகிவருகிறது. இந்நிலைமையில் உலகெங்குமுள்ள தமிழ்மக்களுக்குத் தமிழ்நாட்டு அரசாங்கம் இவை சம்பந்தமாக வழிகாட்டி உதவுவது அவசியமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடைபெறும் இச்சமயத்தில் இதற்கான உரிய ஏற்பாடு கொணர்வது மிகப் பொருத்தமாகுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## அமிரிடம் குறைகளை நேரில் தெரிவிப்பர்

(யாழ்ப்பாணம்)

சிறுபான்மைத் தமிழர் குறைபாடுகள்பற்றி எதிர்க்கட்சித்தலைவர் திரு அ. அமிர்தலிங்கத்தைச் சந்தித்து எடுத்துக் கூறுவதென்று சிறுபான்மைத்தமிழர் முன்னேற்றக் கழகப் பொது நிர்வாகசபை தீர்மானித்துள்ளது.

இக்கூட்டம் கழகத் தலைவர் திரு ஆ. கணபதிநாதன் தலைமையில் நடைபெற்றது வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவராக நியமிக்கப்பட்ட திரு. எஸ். கனகரத்தினத்திற்கு வாழ்த்துத் தெரிவிப்பதென்றும் கழக செயலாளர்களில் ஒருவரான அமரர் நா. சங்கரநாதன் குடும்பத்திற்கு அனுதாபம் தெரிவிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (க-அ)

தமிழகத்தில்

## மணப் பெண்களைச் சித்திரிக்கும் முத்திரை

சென்னை, டிச. 28

தமிழ்நாட்டின் மணப்பெண்களைச் சித்திரிக்கும் முத்திரைகளை அடுத்த செவ்வாய்க்கிழமை மத்திய அரசு வெளியிடுகிறது.

மற்றும்சில மாநிலங்களைச் சேர்ந்த மணப்பெண்களைச் சித்திரிக்கும் முத்திரைகள் மிக விரைவில் வெளியிடப்படும் என்று உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

## இருவர் தெரிவு

(பண்டத்தரிப்பு)

சுழிபுரம் கிழக்கு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் பிரிவு வட்ட விதானைமார்களாக திரு இ. ஆ. பஞ்சாயுதன், திரு ஏ. நடராசா ஆகிய இருவரும் வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்

திருப்பணி வேலைகள் மிகவும் துரிதமாய் நடைபெற்று வரும் உடுவில் சிவஞானப்பிள்ளையார் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் வைகாசி மாதம் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ)

## மடுத்திருப்பதி பரிபாலகர் வேண்டுகோள்

(உடுப்பிட்டி)

மடுப்பகுதியில் 1981-ம் ஆண்டு நடைபெறவுள்ள திருவிழாக்காலங்களில் அங்கு தங்குவதற்கு வீடுகள், குடிசைகள் தேவையானோர் ஏற்கனவே விண்ணப்பித்து ஒழுங்குகள் செய்துகொள்ளுமாறு மடுத் திருப்பதிப் பரிபாலகர் அறிவித்துள்ளார்.

பெப்ரவரி, மார்ச், மே மாதங்களில் நடைபெறும் திருவிழாக்களில் கலந்துகொள்பவர்கள் ஜனவரி 10-ந் திகதியிலிருந்தும், ஜூலை மாத உற்சவத்தில் கலந்துகொள்பவர்கள் மே மாதம் 10-ந் திகதிக்குப் பின்னரும், ஓகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் இடம்பெறும் திருவிழாக்களில் பங்குபற்றுவார்கள் ஜூன் மாதம் 10-ந் திகதியிலிருந்தும், ஒக்டோபர் மாத உற்சவத்தில் பங்குகொள்பவர்கள் ஜூலை 10-ம் திகதிக்குப் பின்பும், டிசம்பர், 82 ஜனவரி மாதங்களில் கொண்டாடப்படும் திருவிழாக்களில் கலந்துகொள்பவர்கள் செப்டம்பர் மாதம் 10-ந் திகதிக்குப் பின்னரும் விண்ணப்பித்துக் கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளார்கள். (அ)

## கடைகள் மீது திடீர் வேட்டை

(உடுப்பிட்டி)

விலைக்கட்டுப்பாட்டதிகாரிகள் மேற்கொண்ட திடீர்வேட்டையில் வடமராட்சிப் பகுதியிலுள்ள பல வர்த்தகர்கள் சிக்கிக் கொண்டனர்.

இவ்வர்த்தகர்கள் மீது கட்டுப்பாட்டு விலையை மீறி பொருட்களை விற்பனை செய்ததாக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. (அ)

## தற்கொலை

(மன்னார்)

கடன் தொல்லை கூடியதாலும் மனைவியுடன் பிரிந்ததாலும் மனமுடைந்த மேசன் தொழிலாளி கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார்.

இச்சம்பவம் பேசாலையில் இடம்பெற்றது. காந்தி என்றழைக்கப்படும் கிருஷ்ணர் வயது 36 என்பவரே இப்படி மரணமானவர்.

இவரது மரணம் தொடர்பாக நடைபெற்ற மரண விசாரணையின்போது இறந்தவரின் மனைவி நாகூர் சாட்சியமளித்தார்.

மன்னார் பொலிசாரின் உதவியுடன் மரணவிசாரணை நடத்திய திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு சயஸ்டெல் டானே தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.


CEYLINCO ADS

# உங்கள் நிதிநிலையை வளம்பெறச் செய்வதே எமது முக்கிய குறிக்கோளாகும்

வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி உங்கள் நிதிநிலை பெருக தனது வங்கிச் சேவையை முழு மனத்துடன் அளித்து வருகின்றது.

சேமிப்பதற்குப் பலவித ஊக்கமளித்து உங்கள் நிதி நிலையை அபிவிருத்தி செய்வதற்காக இயங்குவதே எமது நோக்கமாகும்.



**நிலையான வைப்புப்பணம்**

காலத்திற்கு ஏற்ப வட்டி வழங்குகின்றோம். 12 மாத நிலையான வைப்புப் பணத்திற்கு 20% முதல், 7 நாள் அறிவித்தலில் மீட்கும் பணத்திற்கு வருடத்திற்கு 9% வரை பலவித வட்டி விகிதத்தை அளிக்கின்றோம்

**சேமிப்புப்பணம்:**

ஒரு வருடகாலத்திற்கு உங்கள் பணத்தை திருப்பி எடுக்காதிருந்தால் 10% வட்டியுடன் மேலுமொரு 5% மேல் வட்டியும் வழங்குகின்றோம்.

பலதரப்பட்ட உள்நாட்டு அபிவிருத்தித் திட்டங்களுக்கு எமது வங்கி நிதி உதவி அளித்து வருகின்றது.

உலகெங்குமுள்ள பல முக்கிய சர்வதேச வங்கிகளுடன் எமக்குள்ள தொடர்பினால் வர்த்தகர்கள் தங்களது சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளைச் சுலபமாக்கிக்கொள்ள முடிகிறது.

எம்முடன் வங்கிக் கணக்கு வைத்துக்கொள்ளுங்கள் — எமது மேலதிக விசேஷ சேவைகளினால் எமக்கென ஒரு நற்பெயரை ஈட்டியுள்ளோம்.

வளமான வாழ்விற்கேற்ற வங்கி

**வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி**

57, சேர் பாறன் ஜெயதிலக்கா மாவத்தை கொழும்பு-1

தொலைபேசி 28193-5

சேவை செய்யும் கிளைகள் :

வெள்ளவத்தை, கொள்ளுப்பிட்டி, கொட்டாஞ்சேனை, கண்டி, காலி, யாழ்ப்பாணம், மாத்தளை, களேவெல, மாத்தறை.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### பழம்பெரும் தொழிற்சங்கவாதி, பொதுநலத் தொண்டன்

# அமரர் க. செல்லத்துரை நினைவு மலர்

## தொழிலாளர்களின் தோழர்

நாட்டின் முதுகெலும்பாக உழைக்கும் கரங்களாகத் திகழ்பவர்கள் தொழிலாளர்கள். இரத்தத்தை வியர்வையாகக் கொட்டி நாட்டின் வளர்ச்சிக்கு வித்திட்ட நாயகர்கள் அவர்கள். அத்தகைய திறமைசாலிகளின் அடிப்படை உரிமைகள் நசுக்கப்பட்ட காலகட்டத்தில் ஒன்றுபட்டுக் குரல் எழுப்ப உதயமானவைகள் தான் தொழிற்சங்கங்கள். அத்தகையதொரு சூழ்நிலையில் அரசாங்க பொதுச் சேவைத் தொழிலாளர்கட்கு ஏற்பட்டிருந்த காலகட்டத்தில் உருவாகிய இயக்கம்தான் அரசாங்க பொதுச் சேவைத் தொழிலாளர் சங்கம்.

அந்த சூழ்நிலையில் தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு ஆரம்பகாலத்தில் இருந்த சன்னைக் கொழிலாளரின் விமோசனத்திற்கு முடிவுகட்ட போராட்டக் களத்தில் இறங்கியவர் அமரர் க. செல்லத்துரை அவர்கள். சங்கத்தில் ஆரம்பநாட்களில் இருந்து பாரிய போராட்டங்கள் மூலம் அவர்களது கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கு ஊன்றுகோலாக இருந்து வழிகாட்டியாக விளங்கியமைதனை எவரும் மறுக்க முடியாது. ஏறத்தாழ சுமார் கால் நூற்றாண்டு காலம்வரை அரசாங்க பொதுச்சேவைத் தொழிலாளர் சங்கத்தின் தலைமைப் பதவியை ஏற்று சிறப்பான முறையில் இறக்கும் வரை அவர் செயலாற்றியதை தொழிலாளர்கள் எவரும் மறக்க முடியாது. அத்தகைய பெருமதிவாய்ந்த ஒரு தலைமைத்துவத்தை இழந்தது பொதுச்சேவைத் தொழிலாளர் சங்கத்திற்கு மட்டுமல்ல இந்த நாட்டின் உழைக்கும் வர்க்கத்திற்கும் பேரிழப்பு ஆகும்.

பாரிய குடும்பச் சுமைகளைத் தாங்கியிருந்தும் அந்த நிலைமையைக்கூட பெரிது படுத்தாது தான் எடுத்த காரியத்தில் முன்னேறிச் செல்வதற்கு என்றுமே பின்னடிக்காத உத்தமனாக வாழ்ந்து தொழிலாளர்கட்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தவர் அமரர் க. செல்லத்துரை அவர்கள். அமரரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும் நான் சொல்லிக் கொள்வது யாதெனில் அவரது பூதவுடல் மறைந்தாலும் புகழுடம்பு என்றும் தொழிலாளர் வாழ்வில் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை. இறக்கும் தறுவாயில்கூட அவர் போராட்டத்தில்தான் ஈடுபட்டிருந்தார். வாழ்க்கைச் செலவு உயர்ந்த நேரத்தில் தொழிலாளர்களின் வருவாய் போதாது உள்ளது என்று குரலெழுப்பி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுத் தொழிலாளர்களின் கோரிக்கைகட்கு தலைமை தாங்கியதையும் தொழிலாளர்கள் மறக்கமாட்டார்கள்.

**வெ. யோகேஸ்வரன் பா. உ.**
யாழ்ப்பாணம்



## தமக்கென வாழாத பெருந்தகை

''வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப்படும்''

என்னும் வாக்குக்கிணங்க அமரர் திரு க. செல்லத்துரை அவர்கள் இவ்வையகத்தின்கண் ஐம்பத்திரண்டே ஆண்டுகளுடனே தம் வாழ்வை முடித்துக்கொண்டு கடந்த கார்த்திகைத் திங்கள் 29ம் நாள் எம் எல்லோரையும் மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டு பொதுநலப்பணியிலும் கூட சிறந்து விளங்கினர்.

இவர் தமக்கென வாழாது தம் வாழ்நாளின் பெரும்பகுதியை அரசாங்க பொதுச் சேவைத் தொழிலாளர் சங்க யாழ் கிளைத் தலைவராகவும், மத்திய செயற்குழு உறுப்பினராகவும், யாழ். செயலக ஊழியர் நலன்புரிச் சங்க உபதலைவராகவும் இருந்து தம் சக ஊழியர்களின் தேவைகளை அவ்வப்போது பூர்த்தி செய்துவந்தார்.

**எஸ். தர்மபாலன்**
(மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)

வானுலகெய்திவிட்டார். பேரதிர்ச்சிதரும் இச்செய்தி அவர் தம் அன்பு மனைவி மக்களை மட்டுமன்றி யாழ் செயலகத்தையே துக்கத்தில் ஆழ்த்தியது.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றில் சிறிதும் பிறழாதவராய் எந்நேரமும் அமைதி தோய்ந்த இன்முகத்துடன் விளங்கிய அமரர் திரு செல்லத்துரை அவர்கள் அமரர் திரு க. செல்லத்துரை அவர்கள்தம் சேவை சக ஊழியருக்குமாத்திரமன்றி நாட்டு மக்களுக்கே போதுமானது என்று நினைத்தோ என்னவோ இறைவன் அவரைத் தம்பால் சேர்த்துக்கொண்டார். அவர்தம் ஆத்மா சாந்தியடைய எனது மனப்பூர்வமான பிரார்த்தனைகள்.

## தனக்குவமை இல்லாத் தலைவர்

யாழ் செயலகமும், நகரும்
கண்டதூய தலைவர்களுள்
யாவரும் மதிக்கவும், போற்றவும்
சீரும் சிறப்பும் பெற்று
யாதினுமினிய கொள்கை பல
வாய்ந்த சீரிய செம்மல்
அன்பால், பண்பால், இன்சொல்லால்
யாவர் உளமும் கவர்ந்தோன்
செம்மைமிக்க சீரான செயல் பல
செய்த தலைவ, செல்லத்துரையே!
தங்கள் தனித்துவத்தைத் காணிபோற்றும்
''தனக்குவமை இல்லாத் தலைவரே'' என்று
சாந்தி சாந்தி சாந்தி

தலைவரின் பிரிவைத் தாங்கொணாத
...ரோ. நடராஜசர்மா
(அரசாங்க செயலகம் யாழ்ப்பாணம்)

## தொண்டால் உயர்ந்த தலைவர்

யாழ்.செயலகத்தின் நுழைவு மண்டபத்திலும் உள் நடைபாதைகளிலும் எல்லாக் கிளைகளிலும் சுறுசுறுப்பாக முறுவலமாறா முகத்துடன் வெள்ளை வெளேரென்ற தேசிய உடையில், பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்து நின்ற அந்த உருவம் இன்று எம் மத்தியில் இருந்து மறைந்துவிட்டது. ஆம் 'தலைவர்' செல்லத்துரை நம் மத்தியிலிருந்து மறைந்துவிட்டார். ஆனால் எம் நெஞ்சங்களில் நிறைந்துவிட்டார்.

பணிமனைகளில் வகிக்கும் உயர் பதவியைக்கொண்டோ பட்டங்களைக்கொண்டோ ஒருவர் கணிக்கப்படுவதில்லை. மாறாக சமூகத்தில் அவர் வகிக்கும் ஸ்தானத்தையும் சமுதாய நலனுக்கு ஒருவர் செய்யும் பங்களிப்பையும்கொண்டே ஒரு மனிதன் தன்னைச் சூழ்ந்திருப்போரால் உயர்ந்தவனாக தலைவனாகச் சணிக்கப்படுகின்றான் என்பதற்கு 'தலைவர்' செல்லத்துரை தக்கதோர் உதாரணமாகத் திகழ்ந்தார்.

எத்தனையோ வாய்ப்புக்கள் இருந்தும் தனது பதவியை உயர்த்திக்கொள்ள அவற்றைப் பயன்படுத்தாமல் தான் சார்ந்து நின்ற வர்க்கத்தின் மேம்பாட்டுக்காகவே இறுதி மூச்சுவரை போராடிய சுயநலமற்ற தலைசிறந்த ஒரு தொழிற்சங்கவாதியாக சிறந்த கூட்டுறவாளனாக, சமூகசேவகனாகத் தன்னையே உருக்கி ஒளி பரப்பிய மெழுகுவர்த்தியாக மிளிர்ந்தவர் திரு. செல்லத்துரை.

அன்னார் தேட்டுச் சென்ற இயக்கங்களுக்கும் யாழ் செயலகமும் இருக்கும்வரை அன்னாரது நினைவு நெஞ்சை விட்டு நீங்காது நிழலாடிக்கொண்டே இருக்கும்.

**ஜே. எஸ். எஸ். ஆனந்தன்,**
(உதவி உணவு கட்டுப்பாட்டு அதிகாரி,)
யாழ்ப்பாணம்.

## எல்லோரது அபிமானத்துக்கும் உரியவர்

திரு க. செல்லத்துரை அவர்கள் திடீரெனக் காலமான செய்தி அவரது சுற்றத்தினருக்கு மட்டுமல்ல, அவரைச் சேர்ந்த எல்லோருக்குமே பேரதிர்ச்சியைக் கொடுத்தது. அந்தளவுக்கு அவருடைய செயல் எல்லோரிடமும் மரியாதையை உண்டாக்கியிருந்தது.

எல்லோரது அபிமானத்துக்குரிய அவரது ஆன்மா சாந்தியடைய எல்லோருடனும் சேர்ந்து நானும் பிரார்த்திக்கின்றேன்.

**யோகேந்திரா துரைசுவாமி**
மாவட்ட அமைச்சின் செயலாளரும்,
யாழ் அரசாங்க அதிபரும்.

## அவர் பெயர் நிலைக்கும்

யாழ். மாவட்டத்தில் அரசாங்க பொதுச் சேவைத் தொழிலாளர் சங்கம் ஆரம்பமாகி 34 வருடங்களாகி விட்டது. 21 வருடங்கள் தொடர்ந்து இந்தக் கிளைத் தலைவராக இருந்து தன்னிகரற்ற சேவையாளராகத் திகழ்ந்து வந்த அழியாத பெருமை தலைவர் என்றழைக்கப்படும் அமரர் சிந்தையா செல்லத்துரை அவர்களைச் சாரும். மேலும் இவர் சங்கத்தின் மத்திய செயற்குழு உறுப்பினராகவும் கச்சேரி ஊழியர் நலன்புரிச் சங்கச்

(7ம் பக்கம் பார்க்க)

## அநீதிக்கு தலைவணங்காதவர்

ஆட்சியாளரின் பொருளாதாரக் கொள்கைக்கு எதிராகப் போராட்டத்தில் குதித்த தோழர் அமரராகிவிட்டார்.

உழைப்புக்கேற்ற ஊதிய உயர்வு கேரிய உழைப்பாளி வர்க்கத்தின் தலைவர் மறைந்துவிட்டார்

யூ என். பி. ஆட்சியாளருக்கு அடிபணிய மறுத்து அநீதிக்குத் தலைவணங்காது உரிமைப்போரில் குதித்த உத்தமர் செல்லத்துரை.

வேலைபிழைத்து வேதனைப்படும் தன் தோழர்களான தொழிலாளர்களை வறுமைப் பிடியிலிருந்து காப்பாற்றத், தன் தலைமையை நம்பியவர்களுக்கு உதவி புரிய ஆவலுடன நிதி திரட்டும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் காலனோடு போராடி வணடிய வராவார்.

ஆட்சியாளரோடு போராடிக்கொண்டிருந்தவர் இறுதியில் தம்மையெல்லாம் துயரத்தில் ஆழ்த்திவிட்டுத் தான் தியாகியாகிவிட்டார்.

தமிழ் மீது கொண்ட காதலால், தமிழன் என்ற இன உணர்வு காரணமாக வெள்ளையுள்ளம் கொண்ட இப்பெருமகன் தமிழர் நலனுக்காக உழைக்கும் தமிழ்க் காங்கிரசைத் தன் உயிர் மூச்சுள்ளவரை ஆதரித்து வந்தார்.


வர்க்க நலனுக்காகவும், இன நலனுக்காகவும் சுயநலமற்றுப் பொது நலனுக்காக உழைத்த இதியாகத் தமிழனின் புகழ் மணக்கும் தொண்டு காலமெல்லாம் மணம் வீசிக்கொண்டேயிருக்கும். தமிழினத்தினதும் தமிழ்க் காங்கிரசினதும் சார்பில் அமரருக்கு எனது அஞ்சலியைச் செலுத்துகின்றேன்.

**- குமார் பொன்னம்பலம் -**

**மலர் வெளியீடு**

அரசாங்க பொதுச் சேவை தொழிலாளர் சங்கம் (யாழ் கிளை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 9 மாதங்கள்

ஒன்பது மாதங்கள் முன், மார்ச் மாதம் 28-ந்
தேதி, காப்புறுதித் துறையில் ஒரு புதிய அனுபவம்
வழங்குவோம் என்ற வாக்குறுதியுடன் நாம்
தொழில் தொடங்கினோம்.

இந்தக் குறுகிய காலத்துள், தவணைக் கட்டண வருமா-
னத்தின் மூலம் மட்டுமே, 700லட்சம் ரூபாய்க்கும்
அதிக பெறுமதிக்கு நாம் தொழில் செய்துள்ளோம்.
இது 1980 இற்குரிய எமது 500 இலட்சம் ரூபாய் இலக்கைவிட
200 இலட்சம் ரூபாய் அதிகமாகும். தேசிய பொருளாதா-
ரத்துக்கு இதன் மூலம் கணிசமான பங்களிப்புக் கிடைக்கிறது.

தொழில் தொடங்கிய போது நாம் குறிப்பிட்டது
போல, எல்லா மட்டங்களிலும் உள்ள இலங்கை
மக்களுக்கும், துரித கவனிப்பும் விநயமும் நேரிடை செவை-
யும் தரத்தக்க புதிய நோக்குடன் காப்புறுதியின் பயன்-
களை வழங்கும் கொள்கையை நாம் வரித்துள்ளோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில், காப்புறுதி செய்து எமக்கு
ஆதரவு தரும் நம் அபிமானிகளுக்கும் ஒத்துழைப்பு
நல்கும் எம் பிரதான பிரதிநிதிகளுக்கும் மனமார்ந்த
நன்றி தெரிவிப்பதுடன், வருங்காலத்தில் மேலும்
உன்னதமான சேவை புரிய ஆவலுடன் காத்திருக்கிறோம்.
இவர்கள் எல்லோருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்.

*தேசிய கூட்டுத்தாபனம் ...*
*காப்புறுதித் துறையில் புதிய அனுபவம்*

**தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம்**
660, காலி வீதி, கொழும்பு 3.
தொலைபேசி: 85447

ALMEIDA ASSOCIATES

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
10-30, 2-30, 6-00, 9-30
கல்யாணகுமார் - தேவிகா - நம்பியார்
நடித்த
**நெஞ்சம் மறப்பதில்லை**
(புதிய பிரதி)

**ராணி** - (யாழ்:நகர்)
தினசரி 10-30, பி. ப. 2-15, 6-00, இரவு 9-30
**ஒருதலை காதல்**
(குடும்பப் பெண்ணின் கதை)

**SANTHI** (JAFFNA Phone: 7642. 10-30 2-30, 4-45 7-00 a d. 9- 5 P. M.
ANTHONY QUINN IN
**Hunchback of Notredam**
Scope - Colour - Full of Action Packed Movie

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 6-00 9-30
தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா
**மீனவநண்பன்**

**ராஜா** (யாழ்.நகர்) தினசரி 10-30, 2-15, 6-00 & 9-30
வெற்றிகரமான 2வது மாதம்
ஜெய்கணேஷ், சுந்தரராஜன், நம்பியார்,
கே. ஆர். விஜயா, லதா, ஸ்ரீபிரியா, முத்துராமன்
**சுப்ரபாதம்**
(ஈஸ்ட்மன் கலர்)

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
50-வது நாளை நோக்கி
தினசரி 10-30, 2-30, 6-00 & 9-30
ஜெய்சங்கர், சீமா, கே. ஆர். விஜயா
**ஒரேவானம் ஒரேபூமி**
(வண்ணச் சித்திரம்)

**50-து நாளை நோக்கி...**
**வெற்றிநடை போடுகிறது**
**ராணி** தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
யாழ்ப்பாணம்
இதுவரை வசூல் 2,00,000/-



செவ்வாய் ஆடம்பர அபார புது
**ஒருதலை காதல்**
இன்றே குடும்பத்தோடு பார்த்துமகிழுங்கள்


# இன்றைய பலன்

மார்கழி மாதம் 14ம் திகதி
திங்கட்கிழமை
(29-12-80)

மேடம்:- கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற முடியாமல் வேதனைப்படுவீர்கள். மற்றவர்களின் ஏழனப்பார்வைக்கு இலக்கலாகலாம். புணத்துடன பழகுபவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். மௌனம் விரும்பத்தக்கது.

இடபம்:- கைகொடுத்து உதவுதற்கு தந்தை முன்வருவார். காரிய சித்தியும் கிட்டும் நீண்டநாள் எதிரிகள் ஒன்னும் மீண்டும் நண்பர்கள் ஆவர்கள். திருப்திகரமான தினம்

மிதுனம்:- தொழில் துறையில் நல் மாற்றம் ஏற்படும் மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். நண்பர்கள் மூலம் புதிய தொடர்புகள் ஏற்படும். இன்று சுபதினம்.

கடகம்:- மக்கள் மூலம் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும். உள்ளத்தில் உவகை துள்ளும்.

சிங்கம்:- துள்ளிவரும்வெள்ளிப்பணம் உங்கள் வாழ்க்கையை சோபிதமடையச் செய்யும் ஒரு பெண்ணின் ஆதரவு கிடைக்கலாம்

கன்னி;- இன்னலின் பின்னல் உங்கள் முன்னேற்றத்தைத் தடுக்கும். இதய பாரம் வேதனைப்படுத்தும் திடசித்தம் இருப்பின் எதையும் சமாளிக்கலாம்.

துலாம்:- கன்னல் மொழி மூலம் காரியங்களைச் சாதிப்பீர்கள் கவர்ச்சிகரமான உடை அணிவதற்கு விரும்புவீர்கள். ஆரம்பத்தில எதிர்த்தவர்கள் ஆதரவு கொடுப்பதற்கு முன்வருவார்கள். பொருள் வரவுமுண்டு.

விருட்சம்: சீறிவரும் கோபம் பெரிய மோதல்களை ஏற்படுத்தும் எதிரிகளின் சூழ்ச்சிகளும் பலமாக இருக்கும் சிலருக்கு எதிர்பாராத முகமாக உடல்நலம் பாதிக்கப்படும் பொறுமை வேண்டும்.

தனு: கொள்வனவுகளில் நல்ல திருப்பம் ஏற்படும் வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு கல்வித்துறையில் முன்னேற்றம் தென்படும் அறிஞர்கள் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும்.

மகரம்: அதிஷ்டகரமான தினம் சிலர் வாழ்க்கையில் திரவிய இலாபத்துக்கு இடமுண்டு மனைவாழ்வில் மகிழ்ச்சி தென்படும் வீட்டில் சுபகருமமொன்று இடம் பெறலாம்.

கும்பம்: தூரதேசவாசம் உங்களைத் துயரத்தில் ஆழ்த்தும் எதிர்பாராத விபத்திற்கும் இடமேற்படலாம் ஆயு தங்களுடன் பழகுபவர்களுக்கு அவதானம் வேண்டும்.

மீனம்: இல்லறத்தில் இனிமை தவழும் வெளியிடத்த் தொடர்புகள் பெருகும் இனசனங்களின் உதவியுடன் செல்வாக்கும் பெருகும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை


**ஹரன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெயலலிதா நடித்த
**ரிவால்வர் ரீட்டா**

**வெலிங்டன்**
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
**நினைத்தாலே இனிக்கும்**

**வெஸ்லி**
[மானிப்பாய்]
தினசரி 6-15 9-30.
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர். -சரோஜாதேவி
**பெரிய இடத்து பெண்**

**நாகம்ஸ்** [சுன்னாகம்]
தினசரி 4-45, 7 00 9-30
HIGH PLANE BRISTERS

**லிடோ**
[யாழ்நகர்]
தினசரி 5 காட்சிகள்
REINCARNATION OF PETER PROUD


# பாலர் கல்வி நிலையங்கள்

(வவுணதீவு)

கிழக்கிலங்கை முன்னேற்றக் கழகம் புத்தாண்டை முன்னிட்டு கலகுடாத தொகுதியில் இரு பாலர் கல்வி நிலையங்களை ஆரம்பிக்கவுள்ளது இவ்வைபவத்தில் தொகுதி எம் பி யும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சருமான திரு கே. டபிள்யூ தேவநாயகம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். இதற்கான நடவடிக்கைகளை கழகச் சார்பில் செயலாளர் திரு. சோமு இளந்திரையன் மேற்கொண்டுள்ளார்.

மட்டக்களப்பு-சில்லிக்கொடி ஆறு எனப்படும் பகுதியிலும் சர்வோதய கல்வி நிலையம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்துவருவதாகப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு சி. சுவர்ணவடிவேல் தெரிவித்துள்ளார்.

மலசுத்திகரிப்பு,

# மாநகரசபை புதியலொறி வாங்கும்

"யாழ். மாநகர சபையின் மனித கழிவுப் பொருளை ஏற்றிச் செல்லும் லொறி அடிக்கடி பழுதடைந்து விடுவதால் அதிகாலை 3 மணிக்கு வேலைக்குச் செல்லும் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் பசியுடன் பிற்பகல் ஒருமணிவரை வேலை செய்யவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இப்பாவனைக்குரிய லொறி பழுதடையும் வேளை வேறுலொறி ஒன்றைத் தந்துதவ மாநகரசபை முன்வரவேண்டும்".

யாழ் மாநர முதல்வர், ஆணையாளர், வட்டார உறுப்பினர்கள், சுகாதாரப்பகுதி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கும் சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கும் மத்தியில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது அகில இலங்கை ஸ்தல ஸ்தாபனத் தொழிலாளர் சங்க யாழ்.கிளைச் செயலாளர் திரு அருளப்பு மேற்கண்டவாறு கூறினார்.

"லொறி அடிக்கடி பழுதடைவதால் சுத்திகரிப்பு வேலைகள் காலதாமதமாகின்றன இதை அறியாத பொதுமக்கள் எமது தொழிலாளர் ஒழுங்காக வேலைக்கு வருவதில்லையென்றும் அதனால் சுகாதாரம் பாதிக்கப்படுகிறதென்றும் எமது தொழிலாளர்கள்மீது குறைகூறுகிறார்கள் ஆதலால் உண்மையைப் பொதுமக்களுக்குத் தெரியவைக்கவேண்டியது மாநகரசபையின் கடமை" என்று திரு. அருளப்பு சொன்னார்.

யாழ். மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் மேற்படி தொழிலாளர்களின் சார்பில விடப்பட்ட வேண்டுகோளை ஏற்றுக்கொண்டதுடன் எதிர் வரும் பெப்ரவரி 15-ம் திகதியளவில் புதிய லொறியொன்றைச் சுத்திகரிப்புப் பகுதிக்கெனத் தனியாக ஒதுக்கித் தருவதாகக் கூறினார்.

(கொ-அ)

# கணக்கெடுப்பு

(சுளிபுரம்)

அடுத்த ஆண்டை அங்கவீனர் ஆண்டாக ஐ.நா. பிரகடனப் படுத்தியதை யாட்டி சமூக சேவை அமைச்சு நாடு பூராகவும் மனவலிமை குன்றியவர்கள் பற்றிய கணக்கெடுப்பொன்றை திரட்டி வருகின்றது

(அ)

# அவா...

(5-ம்பக்கத் தொடர்ச்சி)

செயற்குழு உறுப்பினராகவும் யாழ் கசேரி ஊழியர்களின் ஐக்கிய நாணய சங்க உபதலைவராகவும் சேவையாற்றியுள்ளார்.

யாழ். செயலகத்தில் யாழ். கிளைச சங்கத்திற்கு என ஓர் அலுவலகத்தைச் செயற்படச் செய்தள்ளனர் மேலும் எங்கள் தாய்ச்சங்க மகாநாட்டை 19 0-ம் ஆண்டில் எமது மகாநாட்டை பல்லாயிரக்கணக்கான சிங்கள சகோதர அங்கத்தவர்களை அழைத்து யாழ். நகரத்தினம் மகா வித்தியாலயத்தில் நல்லமுறையில் நடாத்தச் செய்தார்.

இவர் கடந்த ஆடி மாதம் நடைபெற்ற பொதுவேலை நிறுத்தத்தில் பாதிக்கப்பட்ட நிலையல் அங்கத்தவர் வேலையிழந்த நேரத்தில் அவர்களின் துயர்கண்டு மனம் இரங்கி ல சருணை படைத்தவர்களிடம் நிதி திரட்டி தன்னால் இயன்றவரை உறுப்பினர்க்கு நிதி ழங்கவும் துயர்தீர்க்கவும் சேவை யாற்றினர். தொழிலாள வர்க்கம் இருக்கும் வரை அவர் பெயர் வாழும்.

சி. ஆறுமுகம்
அ. பொ. சே. தொ. சங்கச் செயலாளர், யாழ். கிளை.

# நாடும் நடப்பும்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்குத் திரும்பத் தொடங்கியிருக்கிறார்களென்றும் தாம் இக்கடிதம் எழுதும்போது ஆறு இளைஞர்கள் இலங்கை திரும்புவதற்குத் தயாராகிக்கொண்டிருக்கிறார்களென்றும் அவர் தெரிவித்திருக்கிறார்

நமது நாட்டிலேயே ஏதோ ஒரு தொழிலைப்பழகி போதுமென்ற மனத்துடன் வாழ்ந்தால் சந்தோஷமாக வாழலாம்.

சில இளைஞர்கள் வெளிநாடுகளில் வேலை கிடைத்து நல்ல நிலையிலிருப்பது உண்மைதான். அவர்கள் அனுப்பும் பணம்தான் இங்கு பயனுள்ள முறையில் செலவிடப்படுகின்றதா என்பதுதான் கேள்வி. வெளிநாட்டுப் பணம் நம் நாட்டில் மண்ணின் விலையை அதிகரிக்கச்செய்திருக்கிறது. பெண்ணும் அதிக விலை சீதனம் கொடுக்கவேண்டிய நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

இரண்டு இளைஞர்கள் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பத்தேடுவதுபற்றி ஆலோசனை செய்துகொண்டிருந்தார்கள்.

ஒருவர் ரோர்மனிக்கு அல்லது பிரான்ஸுக்குப் போவது நல்லதென்று சொன்னார்.

ஈரான்-ஈராக் யுத்தம் முடிந்ததும் ஈரானிலும் ஈராக்கிலும் நிறைய வேலைவாய்ப்பிருக்கும், அதன் பின் அங்கு போவதுதான் நல்லது. ஏனென்றால் யுத்தத்தால் இருநாடுகளிலும் அழிவு அதிகம் ஏற்பட்டிருக்கிறது யுத்தம்முடிந்தபின் அழிந்தவைகளை மீண்டும் நிர்மாணிப்பதற்கு ஆட்கள் அதிகம் தேவைப்படும். இப்பொழுதே மேசன் தொழில், தச்சுத் தொழிலைப் பயின்று கொண்டால் நல்லது.

நல்ல யோசனை தான்!

ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பிரார்த்தனை நூல்கள்

| | |
|---|---|
| பிள்ளையார் கதை | 3 00 |
| பிள்ளையார் புராணம் உரையுடன் | 2.50 |
| விநாயகர் தோத்திர மாலை | 2.50 |
| விநாயகர் அகவலும் கவசமும் | 50 |
| மார்கழிப் பாராயணம் | 2.00 |

**காந்தளகம்**
213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.



# ஈழநாடு
**The Eelanaadu** 60 சதம்


### 'மீண்டும் ஆரம்பிக்கவும்'

(வவுணதீவு) கிழக்குப் பிரதேச போக்குவரத்துச் சபையினால் நடாத்தப்பட்டு வந்த காவெட்டி- மண்முனை பஸ்சேவை கடந்த ஒரு மாத காலமாக துண்டிக்கப்பட்டுள்ளது. இந்த பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு அதிகாரிகளைக் கோரியுள்ளனர்.


எண்ணம் போல் சைவ உணவை சுவைத்து மகிழ்வதற்கு
**அசோக் பவான்**
திறமான என் ஆர் எம். நாட்டரிசிக்கு
அசோக் பவான்
கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமான பயணச் சேவைக்கு
**அசோக் பவான்**
112, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 8095


## மின்கம்பம்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

எமது கடமை. உப வரவு-செலவுத்திட்டத்தில் 10 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் எதுவும் சரிவரச் செய்யப்படவில்லை

திருமதி அந்தோனியார் சுவாமிநாதர் (தமிழ்க் காங்கிரஸ் கூறியதாவது:.

வரவு-செலவுத்திட்டம் 80-ம் ஆண்டு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேயர்வேகமாக அபிவிருத்தி வேலைகளைச் செய்யவேண்டுமென விரும்புகிறார். வேலைகள் நத்தை வேகத்தில் செல்கிறது.

### திருத்தப்பட்ட வீதிகளின் நிலை

விக்டோரியா ரேட் முதலில் திருத்தப்பட்டு சரியில்லாததால் மீண்டும் திருத்தப்பட்டது. பாங்சோல் வீதி ஆணையாளரால் திருத்தப்பட்டது. மீண்டும் குண்டும் குழியுமாகக் காட்சியளிக்கிறது. அந்தோனியார்கோவில் வீதி ஆலய உற்சவத்தின்போது திருத்தப்பட்டது. இப்போது மீண்டும் பழுதடைந்துவிட்டது.

மாநகரசபையில் மின்சாரத்துக்குப் பணம் செலுத்திய பலருக்கு பல காலமாகியும் மின்சாரம் கிடைக்கவில்லை' சிலருக்குத் தற்காலிகம் என்ற பெயரில் மின் இணைப்புக்கள் கிடைத்துவிடுகின்றன.

திரு. எஸ் கபீரியல் (கூட்டணி) பேசுகையில் கூறியதாவது:

பாஷையூரில் ஒவ்வொரு வீட்டிற்கு மேலாலும் மின்கம்பிகள் சென்றுகொண்டிருக்கிறது. வளவுக்கு வெளியால் மின்கம்பிகள் பூட்டப்படவேண்டும்.

### ஊழியர் மதிப்பதில்லை

வீதியில் குமிழ் சுட்டுவிட்டால் நாம் மின்சாரப் பகுதியினரிடம் சென்று கூறினால் அவ்வூழியர்கள் எம்மை மதிப்பதில்லை. நாம் சுகாதார விழாவை மிகவும் கோலாகலமாகக் கொண்டாடினோம்.

ஆனால் நகரோ மிகவும் கேவலமாக இருக்கிறது. சுகாதார வைத்திய அதிகாரி, அடிக்கடி எனது பகுதிக்கு வந்து சென்றுவிடுகின்றாரே தவிர சுகாதாரத்தைப் பற்றி அவர் கவனிப்பதில்லை.

கடந்த காலங்களில் யாழ். மாநகரசபைக் காணிகளை யாரும் சுவீகரித்தது கிடையாது. ஆனால் கூட்டணியின் நிர்வாக காலத்தில் மாநகரசபைக் காணிகளைப் பொது மக்கள் பிடித்து வருகிறார்கள் இதற்கு முதல்வர் சரியான பரிகாரம் காணாவிட்டால் எனது பகுதியிலுள்ள பிரசவ விடுதியிலும் மக்கள் குடியேறிவிடுவார்கள்.

### நாகராசா காலத்தில்

திரு நாகராசா மேயராக இருந்த காலத்தில் ஒரு காணியை அபகரித்த ஒருவர் அக்காணியில் மதிலும் கட்டினார். ஆனால் திரு. நாகராசாவோ உடனடியாக அம்மதிலைக்கூட உடைத்துவிட்டார். அந்த நிலையை மீண்டும் எமது மேயர் மேற்கொள்ளவேண்டும்.

திரு. செல்வநாயம் (கூட்டணி பேசுகையில் கூறியதாவது, பல ஆண்டுகள் யாழ் மாநகரசபை இயங்காதிருந்ததனால் பலவேலைகள் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன. அதை நாம் பொறுப்பேற்று இவ்வளவு தூரம் எமது நகரை முன்னேற்றியுள்ளோம்.

### ஒரு லட்சம் மேலதிகம்

எமது சபையில் பற்றாக்குறை இல்லாதது மட்டுமல்ல 1 லட்சத்து 4 ஆயிரம் ரூபாவை மேலதிகமாக காட்டப்பட்டிருக்கிறது.

அதிகாரிகளும் ஊழியர்களும் கையெழுத்து வைப்பதில் தான் அக்கறையாக இருக்கிறார்களே தவிர வேலையில் அக்கறை செலுத்துவதில்லை. காலையில் கையெழுத்து வைக்கும் போது சகலரையும் காண முடிகிறது. கையெழுத்து வைத்த பின் அவர்களைக் காண முடிவதில்லை.

திரு. என். ரீ. செல்லத்துரை (கூட்டணி) கூறியதாவது; யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சிவஞானம் விசேட ஆணையாளராக இருந்தகாலத்தில் போதிய பணத்தைச் சேகரித்து வைத்துள்ளார். அதனால்தான் 80ம் ஆண்டு எம்மால் பெரும் தொகையான பணத்தை யாழ் மாநகரசபை வீதிதிருத்தவேலைகளுக்கும் மின்சாரத்திற்கும், சுகாதாரத்திற்கும் செலவிட முடிந்தது அதற்காக நாம் ஆணையாளருக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டவராகின்றோம்.

ஒளியை அளிக்கவேண்டிய மின்சாரம் தினமும் செத்துக்கொண்டிருக்கிறது. முன்பு மின்சாரம் பழுதடைந்துவிட்டால் அதற்குரிய அதிகாரிகளிடம் சென்று தெரிவித்தால் அது உடனடியாகக் கவனத்திற்கு எடுக்கப்பட்டு திருத்தப்படும். ஆனால் இப்போ அந்த நிலை இல்லை. அங்கு லஞ்சம் தலைவிரித்தாடுகின்றது. மின்சாரப் பொறியியலாளர் மிகவும் நேர்மையானவர். ஆனால் அவரின் உத்தரவு அங்கு செயல்படுவதில்லை. அதனால் அப்படிப்பட்ட ஊழியர்களுக்கு எதிராக தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

10 தியேட்டர்கள் இருக்கின்றன. வருடம் 20 லட்சம் ரூபா வருகின்றது. அப்படியிருக்கும் புதிய தியேட்டர்கள் அமைக்க எண்ணப்பிப்பவர்களுக்கு ஏன் அனுமதி வழங்கப்படுவதில்லை. தியேட்டர்களுக்கு அனுமதியளிப்பதன் மூலம் நாம் பெருவாரியான பணத்தைப் பெற முடியும்.

திரு. ஆ. துரைராஜசிங்கம் (கூட்டணி) பேசுகையில் வரியிறுப்பாளர்களின் 5 லட்சம் ரூபா வீணாகப் போகக்கூடாது என்பதற்காகத்தான் புல்லுக்குளவேலைகள் ஆரம்பிக்கபடாது இருக்கிறது.

திரு.யேசுதாசன் (தமிழ் காங்கிரஸ்) பேசுகையில்கூறியதாவது: எனது பகுதியில் உள்ள எந்த வீதியும் கடந்த ஒன்றரை ஆண்டுகளாகத் திருத்தம் செய்யப்படவில்லை தற்போது நான்கு வீதிகள் திருத்தவேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

கடந்த 19 மாதங்களுக்கு முன் விசேட ஆணையாளர் காலத்தில் பாஷையூரிலுள்ள முதலாவது ஒழுங்கையில் மின்கம்பம் ஒன்று கொண்டுவந்து பறிக்கப்பட்டது அக்கம்பம் இதுவரை நாட்டப்படவில்லை. அவ்வீதியிலுள்ள மக்கள் கூட்டணியினருக்கு வாக்களிக்காததால் அக்கம்பத்தை நாட்ட அப்பகுதி உறுப்பினர் விரும்பவில்லை. அக்கம்பம் உடனடியாக நாட்டப்பட்டு அவ்வீதியில் வாழும் மக்களுக்கு மின்சாரம் வழங்க வேண்டும் தவறினால் பிரதமர் திரு பிரேமதாசா யாழ்ப்பாணம் வருவதற்கு முன் யாழ். மாநகரசபை முன்றலில் சத்தியாக்கிரகம் ஒன்றை நடாத்துவோம்.

(தொடர்)

## விடுதலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விரிவான அமைப்பை உருவாக்க வேண்டும்.

இந்த அடிப்படையில் இருசாராரும் கருத்து வேற்றுமைகளைக் களைந்து நல்லுறவோடு விடுதலைப்பணியில் ஈடுபட வேண்டுமென ஏகோபித்த கருத்தோடு இச்சந்திப்பு நிறைவேறியது.

## சிங்கள...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மலேஷியா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப்பணிபுரிந்தார். இரண்டாவது மகாநாடு சென்னையிலும் மூன்றாவது மகாநாடு பாரிஸ்நகரிலும் நான்காவது மகாநாடு யாழ்ப்பாணத்திலும் நடைபெற்றன. இப்பொழுது ஐந்தாவது மகாநாடு தமிழ்வளர்த்த தரணியாகிய மதுரையில் நடைபெற இருக்கின்றது.

இம்மகாநாட்டை மிகச் சிறப்பாக நடத்திமுடிப்பதற்காக திரு. எம். ஜி ராமச்சந்திரன் தலைமையிலான தமிழ்நாடு அரசு பிரமாண்டமான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

### நாளை வெளிவரும்

அமரர் தவத்திரு தனிநாயகம் அடிகள் பற்றி கட்டுரை, கவிதைப் போட்டி விபரங்கள் நாளை இதழில் வெளிவரும். இடநெருக்கடி காரணமாக இன்று வெளிவரவில்லை.

### யாருடையது?

யாழ்ப்பாணம் நகர்வீதியில் கண்டெடுக்கப்பட்ட ஒரு தொகைப்பணம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை உதவி விரிவுரையாளர் திரு. செ. கிருஷ்ணராஜா என்பவரால் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அடையாளம் காட்டி அடையாள அட்டையைச் சமர்ப்பித்து பணத்தைப்பெற்றுக்கொள்ளலாம். ஆ-ர்

### பயிற்சி

றேடியோ - டெலிவிஷன், ஏயர் கொண்டிசனிங் மூன்று மாத டிப்பிளோமா பயிற்சிகளி, ஞாயிறு வகுப்புக்கள் 3-1-81வரை மாணவர் அனுமதிக்கப்படுவர். அணுவரும் சேரலாம். நாஷனல் அக்கடமி, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7793

## வீதி மன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முக்கிய பிரதான தெருக்கள் கிளறப்பட்டு, கல்போடப்பட்டு, தார்போடப்பட்டுள்ளது உள் வீதிகளும் பல திருத்தப்பட்டன.

அடுத்தாண்டு டௌசர் ஒன்றும், அலுவலக தேவைக்கு ஒரு வாகனமும் வாங்கப்படவிருக்கிறது.

துரையப்பா விளையாட்டு அரங்கிற்கு அவுஸ்ரேலியாவிலிருந்து புல்விதைகள் வரவழைக்கப்படவிருக்கிறது அரங்கில், கிணறு ஒன்றும் வெட்டப்படவிருக்கிறது.

மூன்று புதிய வீதிகள் போக்கு வரத்து வசதிக்காக திறக்கப்படவிருக்கிறது. திருநெல்வேலியில் 1 லட்சம் கலன் நீர் எடுக்கக்கூடியதாக பெரிய கிணறு ஒன்று வெட்டப்படவிருக்கிறது.

டவுண்கவுன்சில் கோபுர அபிவிருத்திக்கு 2 லட்சத்து 50ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. குருநகர், சுண்ணாகம், தாராக்குளம் ஆகிய பகுதிகளில் குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது இதற்கு யாழ்ப்பாணம், நல்லூர் எம். பி க்கள் உதவி செய்துள்ளனர்.

வரிவிதிப்பதில் சில தவறுகள் ஏற்பட்டிருந்தால் அடுத்த வருடம் கவனம் எடுப்பேன்.

துரையப்பா சமாதிக்கு திருமதிசிறிமா மாவோ யிட்விரும்பினர். யாழ்யடுபதன் மூலம் தமது கட்சிக்கு அவர் ஆதரவு தேட முயன்றார். அதற்கு நான் அனுமதிக்கவில்லை பத்தாண்டுகளில் சபை விரும்பவில்லை' என்று வந்த செய்தி தவறுதலாக ஏற்பட்டது. பின்தங்கிய பகுதிகளுக்கு கூடியளவு பணம் செலவிடப்பட்டுள்ளது

(தொடர்)


## மரண அறிவித்தல்
### ஐயம்பிள்ளை பெஞ்ஜமின் நாகமணி

ஐயம்பிள்ளை பெஞ்ஜமின் நாகமணி காலமாகிவிட்டார். இவர் ராசமணியின் அன்புக் கணவராவார் இவர் யாழ். பரி. பேதுரு ஆலயத்தின் பராமரிப்பாளராவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக கொட்டடி மெதடிஸ்த மேச்சாலைக்கு 30-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7-30 மணிக்கு சச்சேரி நல்லூர் வீதியிலுள்ள புளுறிபனுக்கு அருகாமையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்படும். —மெதடிஸ்த திருச்சபை 7795

## மரண அறிவித்தல்
### திருமதி மேரி முத்தம்மா றிச்சட்ஸ்

சண்டிக்குளி திருமதி மேரி முத்தம்மா றிச்சட்ஸ் அவர்கள் காலமானார். அன்னார், திரு ஆர். எஸ். சிவரெத்தினம் [ஓய்வுபெற்ற வடபிராந்திய உடற்பயிற்சிக் கல்விஅதிகாரியும், வட்டுக்குதி ஐக்கியதேசியக் கட்சி நிர்வாகச்செயலாளரும்] அவர்களின் அன்புத் தாயாரும் திருமதி பேள் சிவரத்தினம் அவர்களின் அன்பு மாமியாரும், ஜெயசீலன் (U K) இரட்ணஜோதி (Mercantile Shipping), புனிதம் (U. K) நிர்மலா ஆகியோரின் அன்புப் பேத்தி ஆருமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று திங்கட்கிழமை (29-12-80) மாலை 4 மணிக்கு, இலக்கம் 1, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டிக்குளி இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக சென்ற் ஜோன்ஸ் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உறவினர்களும் நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும். தகவல் தருபவர்;
7794 ஆர். எஸ். சிவரெத்தினம்.

மக்கினென் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்.
MACKINNON TRAVEL SERVICE (Ceylon) LTD
தங்களது கிளை ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில்
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
என்ற விலாசத்தில் நிறுவி இயங்கி வருகிறது.
இங்கு ஃ உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
ஃ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
சுற்றுலாக்கள் ஃ பாஸ்போர்ட்
இப்படி எல்லா வசதிகளையும் கொழும்புக்குச் செல்லாமலே ஒழுங்கு செய்து கொள்ளலாம்: உங்கள் பிரயாண ஒழுங்குகளை மக்கினென் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட் ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்.
மக்கினென் டிறவல் சேர்விஸ் (சிலோன்) லிமிட்,
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த. பெ. எண்: 92. தொலைபேசி: 8154
பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் டிசம்பர் 29ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a Newspaper at General Post Office Sri Lanka under No: GP 8948/78 The Eelanaadu P. B. No: 49. TeleGrams: Eelanaadu. Phone: 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org